**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.337/2025 எம்.சி.ஓ.பி.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | R.ரவிச்சந்திரன் | வட்டம் | : | |
| த/பெ. | : | ராஜேந்திரன் | மாவட்டம் | : | |
| க/பெ. | : | - | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.2: முதல் விசாரணை**:-

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கடந்த 1 ஆண்டு காலமாக சூரம்பட்டி கிராமத்தில், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 18.02.2010 தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் ரீ.ச.எண்.97/2 என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 11.01.2022 தேதியிட்ட பிழைத்திருத்தல் பத்திரத்தில் ரீ.ச.எண்.97/2 என குறிப்பிடப் பட்டுள்ளது. தாவா 2-வது அயிட்டச் சொத்து 11.03.2011 கிரைய ஆவணத்தில் ரீ.ச.எண்.97/2 என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாவா சொத்தை சென்று புலத்தனிக்கை செய்தேன். புலத்தனிக்கை செய்தபோது, தாவா 1-வது அயிட்ட சொத்தின் நத்தம் சர்வே எண்.95/1B, 95/2A ஆகும். தாவா 2-வது அயிட்ட சொத்தின் நத்தம் சர்வே எண்.95/1C,

95/2B ஆகும். அதன் ரீ.ச.எண்.95/2 Part. நான் புலத்தனிக்கை செய்தேன், அதற்கான சான்று தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். சான்றுப்படி நத்தம் சர்வே எண்.95/1B, 1C, 2A, 2B என்பது தான் சரி. அதன் மொத்த விஸ்தீரணம் 2121 சதுரடி ஆகும். அதற்கான 'அ' பதிவேடு (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது), நத்தம் அடங்கல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ஆகியவை தாக்கல் செய்கிறேன் . அது **சா.சா.ஆ.2, 3** ஆகும்.

**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.337/2025 எம்.சி.ஓ.பி.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.3**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மா.நடராஜன் | வட்டம் | : | |
| த/பெ. | : | மாணிக்கம் | மாவட்டம் | : | |
| க/பெ. | : | - | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.3: முதல் விசாரணை**:-

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஈரோடு தாலுக்கா அலுவலகத்தில் வட்ட சார் ஆய்வாளராக நான் 1 ஆண்டு காலமாக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்தை 04.07.2026 அன்று பார்வையிட்டேன். தாவா சொத்தை பார்வையிட்டபோது, கிரைய ஆவணங்களை பார்த்தேன். அதில் சூரம்பட்டி கிராமம், ரீ.ச.எண்.97/2 என குறிப்பிடப்பட்டிருந்தது. தாவா 1-வது அயிட்ட சொத்து 95/1B, 95/2A மற்றும் தாவா 2-வது அயிட்ட சொத்து 95/1C, 95/2B. கிரையப் பத்திரத்தில் ரீ.ச.எண்.97/2 என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால், சரிதான். வரைபடம் நான் தயாரித்தது ஆகும். அது **சா.சா.ஆ.4** ஆகும்.